# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 1st Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் Geography | Three Hours / Gr -12 (2023) | 22 | T | I,II |

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 15 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் அ,ஆ,இ என மூன்று பகுதிகள் தரப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I பகுதி II பகுதி III ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

## பகுதி - I

1. தெரிவு செய்யப்பட்ட குறித்ததொரு விடயம் சார்ந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் படங்கள்
(1) இடக்கணியப் படங்கள் (2) இடவிளக்கப் படங்கள்
(3) கருப்பொருள் படங்கள் (4) புள்ளிப் படங்கள்
(5) வானிலைப் படங்கள் (…….)

2. இலங்கையின் 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தில் 5Km தூரமான வீதி எத்தனை cm வரைந்து காட்டப்படும்
(1) 8cm (2) 10cm (3) 14cm (4) 15cm (5) 18cm (…….)

3. பின்வருவனவற்றிலிருந்து இடம் சார் தரவுகளை மட்டும் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) பயிர்பரம்பல், வீதிகள், நதிகள்
(2) சனத்தொகை அளவு, வீதிகளின் நீளம், பயிர் நில அளவு
(3) வீதிகள், வீதிகளின் நீளம், சனத்தொகை அளவு
(4) நதிகள், வீதிகளின் நீளம், பயிர் நில அளவு
(5) பயிர்பரம்பல், பயிர் நில அளவு, வீதிகள் (…….)

4. பரவல் தரவில் புவியியல் அம்சங்கள் எடுத்துக் காட்டப்படுவது.
(1) புள்ளிகள், கோடுகள் (2) பல்கோணிகள், புள்ளிகள்
(3) நிரல்கள், கோடுகள் (4) நிரல்கள், பல்கோணிகள்
(5) நிரல்கள், நிரைகள் (…….)

5. 1:50,000 இடவிளக்கப்படத்தில் அமைக்கப்பட்ட பிரதேசத்தினைக் குறித்துக் காட்டப்பயன்படும் நிறம்.
(1) கறுப்பு (2) பச்சை (3) மஞ்சள்
(4) இளம்சிவப்பு (5) நீலம் (…….)

6. மலையாக்க விசையினால் உருவாகிய நிலவுருவங்கள்
   (1) V வடிவ, U வடிவ பள்ளத்தாக்கு
   (2) சமுத்திர அகழிகள், சமுத்திர மலைத்தொடர்கள்
   (3) கூம்பகச் சிகரம், கூர்நுனி உச்சி
   (4) எரிமலைவாய் ஏரி, எரிமலைவாய்
   (5) செம்மறியுருப்பாறை, குத்துப் பாறைவாற்குன்று (…….)

7. வளிமண்டலத்தின் மொத்த வளி உள்ளடக்கத்தில் 96 சதவீதமான வாயுக்கள் காணப்படும் மண்டலம் எது?
   (1) வெப்ப மண்டலம் (2) இடை மண்டலம் (3) படை மண்டலம்
   (4) மாறன் மண்டலம் (5) அயன் மண்டலம் (…….)

8. பின்வரும் பாறைகளில் இரசாயன முறையில் உருவான அடையற்பாறை
   (1) சுண்ணாம்புக் கல் (2) இரும்பு (3) பளிங்குக்கல்
   (4) நிலக்கரி (5) மணற்கல் (…….)

9. நெற்செய்கைக்கு மிகவும் பொருத்தமான மண்
   (1) செங்கபில நிற மண் (2) கிராமு சோல்ஸ் மண் (3) ரெக சோல்ஸ் மண்
   (4) வண்டல் மண் (5) செம்மஞ்சள் பொட்சோல் மண் (…….)

10. அமுக்க விசை காரணமாக ஏற்படும் நிலவுருவங்கள் இரண்டு
   (1) சமச்சீர் மடிப்பு, தலைக்கீழ் மடிப்பு
   (2) பிதிர்வு குறை, விசிறி மடிப்பு
   (3) சாதாரண குறை, சமச்சீரற்ற மடிப்பு
   (4) படிநிலத் தொடர் குறை, சாதாரண குறை
   (5) அமுக்கக் குறை, நேர்மாறான குறை (…….)

11. கிராமம் பகுதிகளில் காணப்படும் குடியிருப்பு
   (1) நேர்கோட்டுக் குடியிருப்பு (2) சந்திக் குடியிருப்பு (3) சிதறிய குடியிருப்பு
   (4) சந்தைக் குடியிருப்பு (5) கடவைக் குடியிருப்பு (…….)

12. இலங்கையின் தென்மேற்கு பகுதியின் தாழ்நிலப் பிரதேசங்களின் பொருளாதார நடவடிக்கைகள்
   (1) பெருந்தோட்டம், நெற்செய்கை (2) நெற்செய்கை, வர்த்தகம்
   (3) பெருந்தோட்டம், மரக்கறிச் செய்கை (4) கைத்தொழில், நெற்செய்கை
   (5) வர்த்தகம், சேவை (…….)

13. சனத்தொகைக் கட்டமைப்பின் பிரதான அலகுகள்
   (1) இனம், மதம் (2) மொழி, இனம் (3) வயது, பால்
   (4) வயது, இனம் (5) பால், மொழி (…….)

14. இலங்கையின் மிகக் குறைந்த சனத்தொகையுடைய மாவட்டம்
   (1) கொழும்பு (2) கண்டி (3) வவுனியா
   (4) மாத்தளை (5) முல்லைத்தீவு (…….)

15. வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்த இலங்கை மக்களில் அதிகமானவர்கள் வசிக்கும் நாடு
   (1) மத்திய கிழக்கு நாடுகள் (2) மேற்கு ஐரோப்பிய நாடுகள்
   (3) தென்னாசிய நாடுகள் (4) தென்கிழக்காசிய நாடுகள்
   (5) தூர கிழக்கு ஆசிய நாடுகள் (…….)

## பகுதி - II

**அறிவுறுத்தல்கள்**

- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- இவ்வினாக்களுக்கு விடையளிப்பதற்கு 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும் உலகப் புறவுருவப்படமும் வழங்கப்படும்

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு :

- விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- இடவிளக்கப்படத்தின் மேல்விடைகள் எழுதப்படக் கூடாது.
- உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தினை இணைக்க வேண்டாம்

(i) உமக்குத்தரப்பட்ட படப் பிரதேசத்தின் பரப்பளவினைச் சதுர கிலோமீற்றரில் தருக. *(01 புள்ளிகள்)*

(ii) *1 – 4* வரை குறித்துக்காட்டப் பட்டிருக்கும் பௌதிக பண்பாட்டம்சங்களை இலக்க ஒழுங்கிற்கு ஏற்ப உமது விடைத்தாளில் எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) படப் பகுதியில் அதிகளவில் செய்கை பண்ணப்படும் பெருந்தோட்டப் பயிர் என்ன? *(01 புள்ளிகள்)*

(iv) சதுரம் A யில் காணப்படும் பொதுச்சேவை நிலையங்கள் நான்கு தருக. *(02 புள்ளிகள்)*

(v) படப் பகுதியின் கிழக்கு பகுதியில் நெற்செய்கைப் பரம்பலைத் தீர்மானித்த இரண்டு காரணிகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(vi) இப்பகுதியின் நீர்ப்பாசன நடவடிக்கைகள் தொடர்பாக இரண்டு காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. *(04 புள்ளிகள்)*

(vii) இப்பிரதேசத்தில் காணப்படும் குடியிருப்புப் பாங்குகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

2. தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) அந்தீஸ் மலைத்தொடர்
(ii) மடகஸ் கார் தீவு
(iii) சகாராப் பாலை வனம்
(iv) அயர் ஏரி
(v) மலாக்கா தொடுகடல்
(vi) போத்தினியாக் குடா
(vii) கிறீன் விச் கோடு
(viii) மத்திய தரைக்கடல்
(ix) எட்னா எரிமலை அமைந்துள்ள தீவு
(x) ஐக்கிய அமெரிக்காவின் தலைநகரம் *(10 புள்ளிகள்)*

## பகுதி - III
## அ பகுதி பௌதிகப் புவியியல்

3. (i) கற்கோளத்தின் உபபிரிவுகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

(ii) புவிக் கோளத்தின் மூன்று பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) மண் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் ஈரவலயத்திற்குரிய மூன்று மண் வகைகளைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

4. (i) பெரிய புவித்தகடுகள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) தகடுகள் அசைவிற்கு உட்படுகின்ற மூன்று முறைகளை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) தகட்டுவிசையினால் ஏற்படும் மூன்று விளைவுகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) புவிநடுக்கத்தினால் ஏற்படும் சேதங்களை இழிவளவாக்குவதற்கான இரண்டு நடவடிக்கைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

## ஆ பகுதி மானிடப்புவியியல்

5. இலங்கை குடித்தொகையின் வயதுப் பிரவு அடிப்டையில் தங்கி வாழ்வோர் விகிதம்

| வயதுப் பிரிவு | தங்கி வாழ்வோர் | |
|---|---|---|
| | 1981 | 2012 |
| A- 0 – 15 | 58.2 | 41.6 |
| B- 60 மேல் | 7.1 | 19.6 |

(i) மேலேயுள்ள அட்டவணையில் A,B எழுத்துக்களில் குறித்துக் காட்டப்படும் வயதுப் பிரிவினருக்குப் பயன்படுத்தக் கூடிய பெயர்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

(ii) அட்டவணையில் தரப்பட்டுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 1981 – 2012 காலத்தில் ஏற்பட்டுள்ள இரண்டு மாற்றங்களுக்குப் பொறுப்பான நான்கு காரணங்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

(iii) பிரிவு B இல் காணப்படும் அதிகரிப்புக் காரணமாக ஏற்படக் கூடிய மூன்று பிரச்சினைகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) பிரிவு B இன் குடித்தொகையைச் சமூக மயப்படுத்துவதற்குப் பின்பற்றக் கூடிய நான்கு நடவடிக்கைகளை ஆராய்க. *(08 புள்ளிகள்)*

6. (i) “சனத்தொகை அடர்த்தி ” என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) a- உலகின் குடியடர்த்தி கூடிய நான்கு பிரதேசங்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

b- குடித்தொகை அடர்த்தி குறைந்த நான்கு பிரதேசங்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

(iii) குடித்தொகை அடர்த்தி குறைந்த பிரதேசங்களில் குடித்தொகை அடர்த்திக் குறைவிற்குப் பங்களித்த இரண்டு பௌதிகக் காரணிகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் உலர்வலயத்தில் குறைவான குடியடர்த்திற்குரிய நான்கு காரணிகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

## பகுதி இ செய்முறைப் புவியியல்

7. (i) கருப்பொருள் படம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) கருப்பொருள் படங்கள் தயாரிக்கப்படும் மூன்று நுட்ப முறைகளும் எவை? *(03 புள்ளிகள்)*

(iii) கருப்பொருள் படங்களின் இரண்டு பயன்பாடுகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) இடவிளக்கப்படங்களின் இரண்டு பயன்களை விளக்குக. *(05 புள்ளிகள்)*

8. (i) புவியியல் தகவல் முறைமை (GIS) என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) புவியியல் தகவல் முறையின் நான்கு கூறுகளைத் தருக. *(02 புள்ளிகள்)*

(iii) புவியியல் தகவல் முறைமையின் (GIS) இரண்டு முக்கியத்துவத்தினை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) பூகோள இடநிலைப் படுத்தல் முறைமையின் அடிப்படைப்பிரிவுகள் மூன்றினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் முதலாம் தவணைப் பரீட்சை - 2022**

**தரம் 12 (2023) புவியியல்**

